DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: ST.C. No. 518/2024 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சந்திரசேகர்(காவலர்) |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 03.03.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது ஆர்எஸ் மங்கல காவல்நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 03.08.2024 ம் தேதி காலை 11.00 மணிக்கு ஆர்எஸ் மங்கல காவல் நிலைய சார்பு ஆய்வாளர் இளங்கோ அவர்கள் தலைமையில் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமசந்திரன், மற்றும் நான் எங்கள் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சுற்றி கண்காணித்து வந்தபோது சேத்திடல் விலக்கு ரோடு அருகே ஒருநபர் சந்தேகம்படும்படியாக சாக்குபை ஒன்று வைத்து

கொண்டு நின்று கொண்டிருந்தார்.எங்களை கண்டதும் தப்பி ஓட எத்தணித்தவரை பிடித்து விசாரித்ததில் அவர் பெயர் குமார் த/பெ. வீரப்பன் என்றும் அரசூரை சேர்ந்தவர் என்றும் தெரிவித்தார். அவர் கையில் வைத்திருந்த சாக்குபையை சோதனை செய்து பார்த்ததில் அதில் 180 மிலி அளவுள்ள Black pearl பிராந்தி பாட்டில்கள் 8 எண்ணம் இருந்தது. மேலும் அவர் கையில் 400 ரூபாய் பணம் வைத்திருந்தார். அதை பற்றி அவரிடம் கேட்டபோது இதுபோல் பாட்டில் விற்று பணம் தான் என்று கூறினார். மேற்படி பாட்டில்களை சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்கு வைத்திருந்ததாக எதிரி ஒப்புகொண்டார்.

2. எதிரிவைத்திருந்த மதுபாட்டில்களையும் ரூபாய் 400 பணத்தினையும் தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் எனது முன்னிலையிலும் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமச்சந்திரன் முன்னிலையில் காலை 11.15 மணிக்கு கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் இடம்பெற்றுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ 1.,ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின் கைப்பற்றிய மதுபாட்டில்களை சார்பு ஆய்வாளர் உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி சம்பவயிடத்திலேயே எனது மற்றும் காவலர் முருகேசன் முன்னிலையில் கொட்டி அழித்துவிட்டார். அதன்பின் சட்டவிரோதமாக சுயலாபம் கருதி விற்பனை செய்வதற்காக மதுபாட்டில்கள் வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியை காரணம் கூறி கைதுசெய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண்.200/2024 u/s 4(1)(A) TNP ACT படி வழக்கு பதிவுசெய்ய சார்பு ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.சம்பவதேதியில் சார்புஆய்வாளர் இளங்கோவன் Roll call நடத்தினார். ஒரு சிறப்பு சார்பு ஆய்வாளர், ஒரு தலைமை காவலர் இரண்டு காவலர்கள் Roll call லில் பங்கேற்றனர். எங்கள் அன்றாடா பணிகளை பாக்கெட்நோட்டில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான் அந்த பாக்கெட்நோட்டை ஆய்வு செய்தால் சம்பவதேதியில் நான் மேற்கொண்ட பணிகள் தெரியவரும் என்றால் சரிதான். சம்பவதேதியில் நாங்கள் ரோந்துசென்ற சமயத்தில் நிலையத்தில் யார் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் சுமார் ஒன்றரை வருட காலமாக காவல்துறையில் பணியாற்றி

வருகிறேன். வழக்கு ச;k பவசமயத்தில் ஆஜர் எதிரி மீது எங்கள் காவல நிலையத்தில் வழக்கு இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான்,. பொதுமக்கள் யாரும் எதிரி மதுபாட்டில்கள் விற்பனைசெய்வதாக புகார் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் சாட்சியாக இருக்கும்படி பொதுமக்கள் யாரை அழைத்தோம் என்று பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. வழக்கின் படி எதிரியின் ஊரானது திருவாடானையில் உள்ள அரசூர் கிராமம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வழக்குகள் தொடர்பாக கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்கள் வைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எதிரி மதுபாட்டில் வைத்திருந்ததாக சொல்லப்படும் சாக்குபையை கைப்பற்றி வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு சொன்ன தேதியில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும் எதிரி எங்களை கண்டு ஓட எத்தணித்தாக வழக்கிற்காக பொய்யாக சாடசியம் அளித்துள்ளேன் என்றும் எதிரி அவரது உறவினர் வீட்டிற்கு ஆர்எஸ் மங்கலத்திற்கு வந்தவரை பிடித்து புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக வழக்கு பதிவுசெய்துள்ளோம் என்றால் சரியல்ல.

3.வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய உயர் அதிகாரிகள் கேட்டுகொண்டதற்கிணங்க நான் வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பாக்கெட்நோட்டை வழக்கின் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமச்சந்திரனும் எதிரி மீது எழுத்து பூர்வ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் சம்பவத்தன்று ரோந்துபணிக்கு சென்றதாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இ'வ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.